# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

**முறையீட்டு மனு எண். 188/மா/2018**

**நாள் : 07/11/2018**

**நெற்குன்றம் நில உரிமையாளர்கள் சங்கம்,**
**சென்னை.** – **முறையீட்டு மனுதாரர்**

**திரு A. விஜயபாஸ்கர்,**
**உதவி செயற் பொறியாளர்,**
**மண்டலம் – 11,**
**சென்னை மாநகராட்சி.** – **எதிர் மனுதாரர்**

சென்னை, நெற்குன்றம் நில உரிமையாளர்கள் சங்கம் என்ற பெயரில் முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 09.08.2018 அன்று பெறப்பட்டு, 188/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுவில் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் குறித்து 11–வது மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் எதிர் மனுதாரரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு உரிய பரிசீலனைக்குப் பின்பு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

சென்னை, நெற்குன்றம் நில உரிமையாளர்கள் சங்கம் என்ற பெயரில் குற்றச்சாட்டு மனு ஒன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டது. மேற்குறிப்பிட்ட மனுவில், சென்னை மாநகராட்சி 11–வது மண்டலம், 33–வது பகுதியில் உதவி செயற்பொறியளாராகப் பணியாற்றி வரும் திரு A. விஜயபாஸ்கர் குறித்து கீழ்க்காணும் குற்றச்சாட்டுகளைத் தெரிவித்து, உரிய நடவடிக்கை எடுக்க ஆணையிடக் கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்யப்பட்டுள்ளது :-

(1) 145–வது வார்டுக்குட்பட்ட அழகம்மாள் முதல் தெருவில் கட்டிடம் கட்டிய நபரிடம் ரூ. 2.65 லட்சம் கையூட்டு பெற்றது ;

(2) 145–வது வார்டில் கட்டப்பட்ட கட்டட உரிமையாளர்களிடம் ரூ. 50 ஆயிரம் கையூட்டு பெற்றது ;

(3) உரிமம் பெற்ற அளவையர் உதவியுடன் கையூட்டு பெறுவது ;

(4) ரூ. 100 கோடி மதிப்பிலான வீடுகள் நங்கநல்லூர், குரோம்பேட்டை மற்றும் உத்திரமேரூர் பகுதிகளில் வாங்கியுள்ளது ;

(5) அம்மா உணவகம் மகளிர் பணியாளர்களிடம் முறை தவறி நடந்து கொள்வது.

முறையீட்டு மனுவில் உரிய முகவரியினைக் குறிப்பிடாததால், முறையீட்டு மனு தாக்கல் செய்த சங்கத்தினரிடம் விசாரணை மேற்கொள்ள இயலவில்லை.

2. எனினும், முறையீட்டு மனுவில் தெரிவிக்கப்பட்ட குற்றச் சாட்டுகள் குறித்து 11–வது மண்டல அலுவலரின் அறிக்கை பெறப்பட்டது. குற்றம் சாட்டப்பட்ட உதவி செயற்பொறியாளர் திரு A. விஜயபாஸ்கர் அவர்களிடம் விளக்கம் பெற்று தனது அறிக்யினை 11–வது மண்டல அலுவலர் சமர்ப்பித்துள்ளார். உதவி செயற் பொறியாளர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அனைத்தும் உண்மைத் தன்மையற்றது எனவும் நெற்குன்றம் நில உரிமையாளர் சங்கம் என்ற அமைப்பு எதுவும் இல்லை எனவும், புகார் அளிக்கப்பட்ட மனு போலியானது என திரு A. விஜயபாஸ்கர் தெரிவித்துள்ளதைக் குறிப்பிட்டுள்ளார்.

3. எதிர் மனுதாரரான உதவி செயற் பொறியாளர் திரு A. விஜயபாஸ்கர் அவர்களிடம் 26.10.2018 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு குற்றச்சாட்டுகள் சம்பந்தமாக விளக்கம் பெறப்பட்டது. கையூட்டு வாங்கியதாகக் கூறப்பட்ட புகாரை விசாரணையின் போது மறுத்துள்ளார். 145–வது வார்டு அழகம்மாள் நகர் முதல் தெருவில் சாலை ஆக்கிரமிப்பு செய்து எந்தக் கட்டடமும் கட்டப்படவில்லை என்றும் தெரிவித்தார். கட்டட அனுமதி வழங்கும் முறை இணையதள வழியாக மேற்கொள்ளப் படுவதால் பொதுமக்களை சந்திக்க வேண்டிய அவசியமில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். அம்மா உணவக மகளிர் பணியாளர்களை தொடர்பு படுத்தி கூறப்படும் குற்றச்சாட்டினையும் மறுத்துள்ளார். பல்லவபுரம், தர்க்கா சாலை எம்.பி அடுக்ககத்தில் தரைதள அடுக்கக மனையில் நகராட்சி நிர்வாக ஆணையரின் அனுமதி பெற்று வீடு வாங்கியுள்ளதையும் எனினும் நங்கநல்லூர், குரோம்பேட்டை மற்றும் உத்திரமேரூர் ஆகிய பகுதிகளில் தன் பெயரிலோ அல்லது மனைவி பெயரிலோ எந்த சொத்தும் இல்லை என்றும் விசாரணையின் போது தெரிவித்தார். மேலும், திரு சீனிவாசராமன் என்ற வி.எஸ். ராமன் என்ற போலி பத்திரிக்கையாளர் தன்னை அச்சுறுத்தி பணம் பறிக்கும் நோக்கத்தோடு இப்புகார் மனுவினை அனுப்பியுள்ளார் என்றும் தெரிவித்துள்ளார்.

4. நெற்குன்றம் நில உரிமையாளர்கள் சங்கம் என்ற முகவரியில் கையொப்பமிடப்படாத மனு இம்முறைமன்ற நடுவத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரமான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. ரூ. 2.65 லட்சம் கையூட்டு வழங்கிய 145–வது வார்டு, அழகம்மாள் முதல் தெருவில் வசிக்கும் நபர் குறித்த விவரங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. எனவே, 145–வது வார்டு, பகுதி–33, உதவி செயற்பொறியாளர் திரு A. விஜயபாஸ்கர் மீதான குற்றச்சாட்டுகளுக்கு போதிய ஆதார ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாத நிலையில், இந்நேர்வில் தொடர் நடவடிக்கையை கைவிடலாம் எனக் கருதி, அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018– ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள், 7–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளருக்காக.

பெறுநர்

1. திரு A. விஜயபாஸ்கர்,
   உதவி செயற் பொறியாளர்,
   பகுதி–33, மண்டலம் – 11,
   சென்னை மாநகராட்சி,
   வளசரவாக்கம், சென்னை –87..

2. மண்டல அலுவலர்,
   மண்டலம் – 11,
   133, ஆற்காடு சாலை,
   வளசரவாக்கம்,
   சென்னை – 87.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பிரிவு அலுவலர்(நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்